## DEPOSITION OF WITNESS

**Crl.Misc.39**
**(CHAPTER XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : நடராஜன் | Caste | : |
| S/o.W/o.D/o. | : சுப்ரமணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 13.6.2024.

A1 A3 present. A2 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் கல்லேரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சின்னுசாமியை எனக்குத் தெரியும். அவருக்கு சொந்தமான இடத்தில் நான் வெல்டிங் பட்டறை வைத்திருந்தேன். இறந்துபோன சின்னுசாமி நியூஸ் பேப்பர் ஏஜண்டாகவும் ஓட்டல் தொழிலும் செய்து வந்தார். ஆஜர் எதிரி சந்திரசேகரை எனக்குத் தெரியும். அவர் இறந்துபோன சின்னுசாமியின் மகன் ஆவார். மற்றொரு

எதிரியை எனக்குத் தெரியாது. வழக்கு சம்மந்தமாக சின்னுசாமி இறந்துபோனது மட்டுளம் எனக்குத் தெரியும். 3 நாட்களாக நான் பட்டறைக்கு வரவில்லை. அவரது இறப்பு பற்றி மறுநாள் காலையில் நான் தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரி மற்றும் இறந்துபோன சின்னுசாமி ஆகியோர்கள் சுமூகமாகதான் இருந்தார்கள். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை 2 நாட்கள் கழித்து விசாரித்தபோது என்னுடைய விலாசம் மற்றும் போன் நெம்பரை மட்டும் கொடுத்தேன்.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது இறந்துபோன சின்னுசாமிக்கும் அவரது மகன் சந்திரசேகருக்கும் சொத்து சம்மந்தமாக இருந்த தகராறு பற்றியும் கடந்த 18.05.2018 ம் தேதி மாலை 3.00 மணி சுமாருக்கு கடையில் இருந்தபோது பொன்னுசாமி என்பவர் தென்னைமட்டை வெட்ட சின்னுசாமி வீட்டிற்கு சென்றார் என்றும், சின்னுசாமியின் மூத்த மகன் சந்திரசேகர் அவருடன் 2 பேரை கூட்டிக்கொண்டு வீட்டிற்கு சென்றார் என்றும், கொஞ்ச நேரம் கழித்து சந்திரசேகர் 2 பேரையும் அவர்கள் வந்த வண்டியிலேயே

கூட்டிக்கொண்டு சென்றுவிட்டார் என்றும், சந்திரசேகருடன் வந்த 2 பேர்களும் சேர்ந்து சொத்திற்காக சின்னுசாமியின் கழுத்தை இறுக்கி கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று காவல் ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் கேட்டுக்கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.